**செய்தி வெளியீடு எண்:076** **நாள் : 13.12.2015**

**செய்தி வெளியீடு**

சவூதி அரேபிய சுகாதார அமைச்சகத்தின் அரசு மருத்துவமனைகளில் பணிபுரிவதற்கு பிஎஸ்சி/ எம்எஸ்சி தேர்ச்சியுடன் இரண்டு வருட பணி அனுபவம் மற்றும் 32 வயதிற்குட்பட்ட மகளிர் செவிலியர்களுக்கான நேர்முகத் தேர்வு புதுடில்லி, ஹைதராபாத், பெங்களூரு மற்றும் கொச்சின் ஆகிய நகரங்களில் 17.2.2015 முதல் 4.3.2015 வரை நடைபெற உள்ளது. 10, 12ஆம் வகுப்பு மற்றும் பிஎஸ்சியில் 70 விழுக்காடு மதிப்பெண் பெற்றவர்களுக்கும் மற்றும் முன்னணி மருத்துவமனைகளில் பணி அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

தேர்ந்தெடுக்கப்படுபவர்களுக்கு பணி அனுபவத்திற்கேற்ப ஊதியத்துடன் இலவச விமான டிக்கெட், இலவச இருப்பிடம் மற்றும் இதர சலுகைகளும் வேலையளிப்போரால் வழங்கப்படும்.

மேற்குறிப்பிட்ட பணிக்கு விருப்பமும் தகுதியும் இருப்பின் தங்களின் சுய விவரங்கள் அடங்கிய விண்ணப்பத்துடன் கல்வி, அனுபவம், பாஸ்போர்ட் ஆகியவற்றுடன் ஒரு புகைப்படத்தை, எண்.42, ஆலந்தூர் சாலை, ஒருங்கிணைந்த வேலைவாய்ப்பு அலுவலகம், திரு.வி.க. தொழிற்பேட்டை, கிண்டி, சென்னை–32 என்ற முகவரியிலுள்ள தமிழக அரசு நிறுவனமான அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனத்திற்கு ovemclsn@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு உடனடியாக விண்ணப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

மேலும் விவரங்கள் அறிய 044–22502267/22505886/08220634389 என்ற தொலைபேசி எண்கள் அல்லது www.omcmanpower.com என்ற இணையதளத்திலும் அறியலாம்.

**நிர்வாக இயக்குநர்**
**அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம்**
**சென்னை**

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**